மருதம் நெல்லி கல்விக் குழுமம்

# ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது)

பென்னாகரம் சாலை, நல்லானூர், தருமபுரி - 636813.

மருதம் நெல்லி
தமிழ் இலக்கியப் பேரவை

## தமிழ்த்துறை மற்றும் மருதம் நெல்லி தமிழ் இலக்கியப் பேரவை

இணைந்து நடத்தும்

## தமிழ் இலக்கியங்களில் பக்திநெறி

(சங்க காலம் முதல் சமகாலம் வரை)

ISBN 978-624-5967-18-6

## ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கம்

## பாராட்டுச் சான்றிதழ்

ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 13.09.2024 அன்று தமிழ் இலக்கியங்களில் பக்திநெறி (சங்க காலம் முதல் சமகாலம் வரை) என்ற பொருண்மையில் நடைபெற்ற ஒருநாள் பன்னாட்டுக் கருத்தரங்கில்.....முனைவர் மா. தே. அருண்மொழி நங்கை............... அவர்கள் கலந்து கொண்டு ...பெரியபுராணத்தில் திருநாட்டுச் சிறப்பு ஓர் ஆய்வு... தலைப்பில் கட்டுரை வழங்கினார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

டாக்டர். கா.கோவிந்த்
தாளாளர்,
மருதம் நெல்லி கல்விக் குழுமம்

முனைவர். சி.பரஞ்சோதி
முதல்வர்,
ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

பேரா.நா.நாகராஜ்
தமிழ்த்துறைத் தலைவர் / கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்,
ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி.

# தமிழ் இலக்கியங்களில் பக்திநெறி

(சங்க காலம் முதல் சமகாலம் வரை)




பதிப்பாசிரியர்கள்

முனைவர் சு.சதாசிவம் | பேரா.இல.சதீஸ் | பேரா.நா.நாகராஜ் | பேரா.இல.ஜெயஸ்ரீ

பேரா.ர.விக்னேஷ் | பேரா.கா.கார்த்திக் ராஜா | பேரா.மா.சந்தோஷ்



வெளியீடு

மருதம் நெல்லி கல்விக் குழுமம்

ஜெயம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நல்லானூர், தருமபுரி.

# நூல் குறிப்பு

தலைப்பு : தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறி
(சங்க காலம் முதல் சமகாலம் வரை)

பதிப்புரிமை : முனைவர் சு. சதாசிவம்
பேரா. இல. சதீஸ்
பேரா. நா. நாகராஜ்
பேரா. இல. ஜெயஸ்ரீ
பேரா. ர. விக்னேஷ்
பேரா. கா. கார்த்திக் ராஜா
பேரா. மா. சந்தோஷ்

முதற்பதிப்பு : செப்டம்பர், 2024

உரிமை : பதிப்பாசிரியர்கள்

பக்கம் : 708

ISBN : 978 - 624 - 5967 - 18 - 6

கணினி அச்சு : செந்தமிழ் தட்டச்சு மையம்
பழைய பெருங்களத்தூர், சென்னை-63.
செல் : +91 9444768745.

அட்டை
வடிமைப்பு : ஆ.சு. கண்ணன், மதுரை.

அச்சாக்கம் : நொவினா ஆப்செட் பிரிண்டிங் & கோ
புதிய எண் 164, ப.எண் 144
வி.ஆர். பிள்ளைத் தெரு, ஐஸ் ஹவுஸ்
சென்னை - 600 005.

வெளியீடு : மாவட்ட எழுத்தாளர் சங்கம்
மாவட்ட செயலகம்
மட்டக்களப்பு, இலங்கை
கைபேசி : + 94779028965
மின்னஞ்சல்: battiwritter@gmail.com

விலை : உரு. 500/-

88. பெ. புவனேஸ்வரி 417
திருஞானசம்பந்தரின் பக்தி நெறிகள்

89. க. செல்வமுருகன் 421
பெரிய புராண பக்தி நெறியில் பெண்

90. பூ. அக்ஷயா 425
பெரியபுராணத்தில் பக்தி நெறிகள்

91. முனைவர் மா.தே.அருண் மொழி நங்கை 428
பெரியபுராணத்தின் திருநாட்டுச் சிறப்பு ஓர் ஆய்வு

92. முனைவர் ப.கோகுல்நாத் 433
பெரியபுராணம் சுட்டும் தொகையடியார்கள்

93. மு. இளங்கோ 438
காரைக்கால் அம்மையாரின் பக்தி நெறி

94. பேரா. செ. நாகராஜன் 441
முருக வழிபாட்டில் பலவிதத் தோற்றங்கள்

95. முனைவர் சு. சதாசிவம் 446
முருக வழிபாட்டில் பழந்தமிழர் நம்பிக்கைகள்

96. முனைவர் க. மோகன் காந்தி 451
முருகன் ஓர் போர் மறவன்

97. முனைவர் க.பூபதி 455
முருகன் வழிபாடு

98. முனைவர் இரா. அகிலா 460
குன்றுகள் தோறும் குமரன் இருப்பான்

99. முனைவர் கதிர்முருகு (கதி. முருகேசன்) 465
நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி

100. கு.ரதி 469
வட்டார தெய்வங்களும் பக்தி நெறியும்

101. முனைவர் மு. கஜலட்சுமி 472
வள்ளலாரின் பக்தி நெறி

102. அ. கலைவாணி 476
விறலிவிடு தூதுக்களில் இடம்பெறும் தலச்சிறப்புகள்

103. ஆ.கார்த்திக் 480
வேள்பாரியில் கொற்றவை வழிபாட்டு நெறிகள்

104. ப. பிரபாவதி 485
ஜெயமோகன் புதினங்களில் வழிபாடு

105. முனைவர் நா. காயத்ரி 490
நான்காம் திருமுறையில் ஒற்றியூர் உத்தமன்

# 91. பெரியபுராணத்தின் திருநாட்டுச் சிறப்பு

முனைவர் மா.தே. அருண் மொழி நங்கை
தமிழ்த்துறை
ஹோலி கிராஸ் கல்லூரி
நாகர்கோவில்.

## முன்னுரை

சங்ககாலத்தில் கடவுள் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. சமயநெறி என தனியாக எதுவும் போற்றப்பட்ட நிலையை காண முடியவில்லை. ஆனால் கி.பி. ஏழாம் நூற்றாண்டு தொடங்கிய பின்பு சைவமும் வைணவமும் மலர்ந்து இலக்கியத்தில் ஒரு சமயத்தைப் பரப்பும் நிலை ஏற்பட்டது. பக்தி இலக்கியங்கள் பரவலாய் தோன்றிய அக்காலம் சமய மறுமலர்ச்சிக் காலம் எனக் கூறலாம். ஏழாம் நூற்றாண்டில் தொடங்கிய இந்த சமய மறுமலர்ச்சிக் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டில் சேக்கிழார் பெருமானாரால் பெரிதும் பேணி வளர்க்கப்பட்டது. பக்தி இயக்கத்தில் ஈடுபடும் தொண்டர்களின் வரலாறு ஒன்றும் முழுமையாக கிடைக்கவில்லை என்ற குறையை அவர் நீக்க முற்பட்டார். புனைக்கதை வடிவிலாக புகுந்து தலையெடுத்து தமிழ் மக்களின் உள்ளங்களைப் பிற சமயக்காப்பியங்கள் கவர்ந்திருந்தன. இதற்கு மாறாக பக்தியின் பயனையும் திருத்தொண்டின் சிறப்பையும் உணர்த்தும் அடியார்களின் உண்மை வரலாற்றை சேக்கிழார் எழுதினார். சேக்கிழாரின் இலக்கியத்தொண்டு சிறக்க இறைவனே ஷஉலகெலாம்' என அடி எடுத்து கொடுத்ததாக கூறுவதுண்டு. அரசனே இவரை ஆனை மீது அமர்த்தி தான் கவரிவீசிச் சிறப்பித்தான் என்பதுமுண்டு. சோழர் தம் எல்லையை பனிக்குன்று உச்சிவரை நீட்டி தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர் .அவற்றுள் வன்தொண்டர் பிறந்த வளநாடு வான்பொய்ப்பினும் தான் பொய்யா வளக்காவிரி ஓட வழி வழியாய் சோழர் ஆண்ட பொன்னாடு. கன்னி நதியாம் காவிரி பாய்ந்து காவெல்லாம் பூ மலரும் அழகு நாடு. அந்நாட்டு இயல்புதனை செம்மையாக சொல்ல வந்தவர் சேக்கிழார். பூவிரியும் கரைபாயும் காவிரியை சிறப்பித்து திருநாட்டு சிறப்பினை அழகுற விவரிக்கின்றார். அதனை இவ் ஆய்வு கட்டுரையில் காண்போம்.

## காவிரி நீர்ப்பெருக்கு

பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமாப்பு என்னும் அணி ஐந்தையும் அளிக்கும் அன்னையவள் காவிரி. ஆதிமாதவ முனிவனான அகத்தியன் தந்த பூத நீர்க் கமண்டலம் பொழிந்த நீர் பெருக்கல்லவா காவிரி. நெல்முத்தை ஈன்று பார் உலகத்தை காக்க புறப்பட்ட காவிரியை

பார்க்கிறார் புலவர். நிலமகள் சூடிய அந்நித்தில மாலை,

"சையமால் வரைபயில் தலைமை சான்றது
செய்ய பூகமட்கு நற்செவிலி போன்றது
வையகம் பல்லுயிர் வளர்த்து நாடொறும்
உய்யவே சுரந்தளித்து ஊட்டு நீரது" (திருநாட்டுச் சிறப்பு:53)

என்கிறார். ஆற்றுப் பெருக்கால் நாட்டை செழிப்படை செய்வது மட்டுமன்று கோடையில் ஊற்றுப் பெருக்காலும் உலகை காப்பாற்றுபவள் காவிரி. பசும்புல் முதல் பல்லுயிர் வரை ஆகாயத்தினின்று விழும் நீர்பெற்றுச் செழிக்கும் நிலையெண்ணி அதன் துளி இல்லையெனில் உலகின் நிலை என்ன என்று எண்ணி பெற்ற நற்றாய் என்று கூறாமல் பேணி வளர்க்கும் செவிலி என்கிறார். வளம் தரும் வானம் நற்றாயாகவும் அதனை வழங்கிடும் காவிரி செவிலித் தாயாகவும் வர்ணிக்கின்றார்.

இவ்வாறு வானம் தரும் நீரை காத்து நமக்காக தரக்கூடிய காவிரியை நான்முகனை ஒத்துள்ளதாக கூறுகின்றார். காவிரி மாபெரும் சுழிகளையும் மலர்களையும் தன்மையில் தாங்கி வரும் தன்னை உடையது. இறைவன் பல்லுயிர் படைப்பவன். காவிரியும் தன்னில் பாயும் நீரினால் பல்லுயிரும் படைக்க கூடியது. இறைவன் கமண்டலம் தாங்கி நிற்கக் கூடியவன்.அகத்தியர் கமண்டலம் தாங்கி நின்ற நீர் தான் காவிரி ஆகும்.

மலையிடத்துப் பிறந்து மக்களுயிர் காப்பதால் மங்கை சிவகாமியை ஒத்த கயிலைமலைமது மலர்களை ஏந்தி வந்து புதுநீரால் வழிபட்டு தான் செல்லும் வழியில் உள்ள சிவாலயங்களில் எல்லாம் இறைவனை வணங்குவதால் இறைவன் அன்பரையும் ஒக்கும் என்கிறார்.

இவ்வாறு சிவனிடம் அன்புடையாரையும் அவன் அருள் பெற்றாரையும் ஒத்துவரக்கூடிய காவிரி நீர் அதனிடத்தில் நீராடும் பெண்கள் மார்பில் பூசி உள்ள குங்குமமும் சந்தனமும் கரைந்து ஓடுவதால் தெளிவான நீராக இருந்தாலும் தெளிவில்லாதது ஆகிறது. இந்த காவிரி நீரானது வண்டுகள் ஒலிக்க மலர்த்தேன் சிந்த ஆங்காங்குள்ள குளங்களில் நிறைந்து கால்வாய் வழி ஓடி வயல்களில் பாய்ந்து செழிப்பை ஏற்படுத்துகிறது.

## காவிரி நாட்டு வயற்காட்சிகள்

கால்வாய் வழியாக ஓடி மதகுள் நுழைந்து வயலில் புகும் புது வெள்ளத்தை எதிர்கொண்டு அழைப்பது போல் மள்ளர்கள் மகிழ்ச்சியுடன் ஆரவாரித்து கைகொட்டி அழைக்கும் ஓசையானது வானத்தின் அற்புதமும் கேட்கும் தன்மையுடையது. வயல்களில் நாற்றுக்களைப் பறிக்கும் பெண்களினுடைய மாண்பும், பறித்த முடிகளை நீரில் நடுபவர் செய்கையும், உழுது பண்படுத்தும் உழவர்கள் வரிசையும், கண்டோர்க்கு மகிழ்ச்சி தரும் காட்சிகளாகும். இக்காட்சியானது ஓர் ஈர் இடங்கள் மட்டுமல்லாமல் உலகம் முழுவதும் பரவியிருந்தன. சேக்கிழார் இவ்வாறு உரைக்கின்றார்.

*"உழுத சால் மிக ஊறித் தெளிந்த சேறு*
*இழுது செய்யினுள் இந்திர தெய்வதம்*
*தொழுது நாறு நடுவார் தொகுதியே*
*பழுதில் காவிரி நாட்டின் பரப்பெலாம்"*
*(திருநாட்டுச் சிறப்பு:62)*

## உழவர் செயல்கள்

நாற்று நட்டபின் வயல்களில் நீர் பாயும். புது நீர் பரந்து பாய்ந்து வரும். வயலில் வளர்ந்த நெல்நாற்றின் பயிர் இலைச்சுருள் விரிந்து காட்டும். இவற்றைக் கண்ட உழவர்கள் களைக்கட்டும் பருவம் வந்துவிட்டது என கடைசியருக்கு உணர்த்துவர். களை களைந்து செல்லும் கடைச்சியர் கால்களில் 'தண் தரளம் சொரிபணிலம் இடறும்.' அதனால் அவர்கள் நடை தளர்ந்து அசைந்தாடிச் செல்வர். சென்று அருகில் உள்ள வரப்புகளை அடைவார்.

கடைசியர்கள் செங்குவளை பறித்து அணிந்து கொள்வர். அப்புதுமலரின் மது உண்ண வரும் வண்டை இரு கையால் விரட்டுவர். நறுமலர்ச்சூழ் வண்டுகளோ அஞ்சாது அகலாதிருக்கும்.அயலில் உள்ள வண்டுகளும் கையை மலரென்று அணுகி வந்து சுற்றும். வண்டு அகற்ற புகுந்த கை பிறவண்டுகளையும் வரவழைத்த பெண்கள் ஷதிங்கள் நுதல் வெயர் வரும்பச் சிறுமுறுவல் தளவரும்பப் பொங்குமலர்க் கமலத்தின் புது மது வாய் மடுத்தயர்வார்.

## கண்டவர் மயக்கம்:

கடைசியர்கள் அருந்திய கள் மட்டுமில்லாமல் அவர்கள் அமர்ந்திருந்த களமும் மயக்கம் தருவதாக இருந்தது. தொலைவில் இருந்து கண்டு வந்தவர்களுக்கு அலைச்சலைத் தந்தது. கரும்பு என்று கருதி அங்கு வந்தவர்கள் அதன் பின் அறிந்து கொண்டனர் அது நெல் என்று. நெற்பயிர் அத்தகைய உயரம் உடையதாக இருந்தது. கமுகென்று காண வந்தவர்கள் கரும்பென்று திரும்பச் சென்றனர். இதனை

*"கரும்பல்ல நெல்லென்ன கமுகல்ல கரும்பென்ன"*
*(திருநாட்டுச் சிறப்பு:65)*

என சொற்சுவை ததும்ப பாடுகிறார் சேக்கிழார்.

## சிறுவர் செயல்

வயல்காட்டின் வெளிப்புறத்தில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருப்பர். கயல்பாயும் நீர் நிலையின் கரை சார்ந்த பகுதிகளில் உள்ள கருங்குழிசிகளைச் சோறாக்கும் பானையாக பயன்படுத்துவர். ஆமை ஓடுகளை அடுப்பாக பயன்படுத்தி அரக்காம்பல் மலரினை நெருப்பாகவும் நத்தை ஓட்டு பானையில் முத்தருசியினை இட்டு மலர் தேனாம் உலைநீரில் மணமிக்க சோறை ஆக்கி சிறுவர்கள் மகிழ்கின்றனர். பிறர் நாட வளம் தரும் இந்த நாட்டில் ஆலைகளை இயக்குவோர்

ஓசையும், சோலைகளில் கரும்புகளின் ஆரவாரமும், உலகம் மேன்மையடைய ஓதும் நான்மறை ஒலியும் அலையின் ஓசையால் மிகுந்த ஒலியும் கேட்டுக் கொண்டே இருக்கும்.

## நீர் நிலையின் சிறப்புகள்

சோழநாட்டிலுள்ள நீர் நிலைகள் அகன்ற பெரிய துறைகளுடையன. அவற்றில் அன்னங்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும்.வாளை மீன்கள் நிறைந்திருக்கும். எருமைகள் துடுமெனப் புகுந்து நீர்நிலையில் திரியும். எருமைகள் பாய்கையில் பல நிறத்து வாளை மீன்களும் பக்கத்தில் உள்ள கமுக மர உச்சிவரை பாய்ந்து விழும். வண்ணம் பலவான வாளைகள் கதிரொளியில் முக்குளித்து பாய்கையில் நீர்நிலையினுள் வானவில்லின் வண்ணங்களுடன் தோன்றும். நீர்நிலையும் சோலையும் வானத்து நிலத்தில் விளங்குவனவாதலின் கமுக்கின் மேற்பாயும் கன்னி வாளைகள் 'மன்னு வான்மிசை வான விற்போலுமால்'. வண்டுகள் நீர் நிலையின் பூத்திருக்கக்கூடிய பூக்களிலும் தேன் அருந்தி மடுத்திருக்கும்.நீர்நிலையில் வாழ்கின்ற கயல்களோ தாவி அப்பொழிலின் கனிகளை உண்ணும்.

## நெற்பயிர்

நீர் நிலைகளின் அருகில் உள்ள வயல்களில் நெற்பயிர் செழித்து வளர்ந்திருக்கும். சூல் முதிர்ந்து பசலையுற்றுச் சுருள் விரித்து நிற்கின்ற சாலி என்னும் நெற்பயிர்கள் அரனுக்கு அன்பர் சிந்தை போல் அலர்ந்து நின்றன. அவ்வாறு நின்ற கதிர்கள் நீண்டு மணிசெறிந்து வரிசை வரிசையாய் வளர்ந்திருந்தன. மணிகளில் பால் ஊறி மிகுதியாய் காய்த்து முதிர்ந்திருந்தன. அவ்வாறு முதிர்ந்த மணிகளின் கனமையால் சற்றே வளைந்து இருந்தன. இந்த நிலை 'வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்த சென்னியும் தந்த தலைவன்'பால் பத்தியின் பாலராயி பரமனுக்கு ஆளாம் அன்பர்கள் ஒருவரை ஒருவர் காணுங்கால் தலை தாழ்த்தி வணங்குதலை ஒத்திருந்தது.

இவ்வாறு செந்நெல்லை அந்நாட்டு மக்கள் ஒருபுறமாய்க் குவித்து வைத்திருப்பார்கள். பரிவுடைய பிடித்த பல்வகை மீன்களையும் குன்றென ஒருபுறம் கூட்டி வைத்திருப்பர். முத்தின் சுடர் மாலையை ஒருபுறம் சேர்த்து வைத்திருப்பர்.விரிமலர் கற்றைகளைத் தேன் வடியச் சேர்த்து ஒரு புறம் இடுவர். இதனை,

> "அரிதரும் செந்நெல் சூட்டின்
> அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
> பரிவுறத் தடிந்த பன்மீன்
> படர்நெடுங் குன்று செய்வார்
> சரிவளை சொரிந்த முத்தின்
> சுடர்ப்பெரும் பொருப்பு யர்ப்பார்
> விரிமலர் கற்றை வேரி
> பொழிந்திழி வெற்பு வைப்பர்" (திருநாட்டுச் சிறப்பு:73)

சேக்கிழார் இவ்வாறு எடுத்துரைக்கின்றார்.

குவிக்கப்பட்ட நெற்போர் பொன்மலை போன்றிருக்கும். அச்சூட்டடி நெல்லினைக் கதிரினின்றும் பிரிக்க வேண்டி எருமைக் கூட்டங்கள் சுற்றிச் சுற்றி வந்து போரடிக்கும் காட்சி நீர் நிறைந்த கருமேகங்கள் பெரிய பொன்மலைச் சாரலின் மேல் வலம் வந்து சுற்றுதல் போல் தோன்றியது.

சூடடித்த பின்னர் வைக்கோலைப் பிரித்தெடுத்து வேறு இடத்தில் சேர்ப்பர். நெல்லை முறம் கொண்டு வீசி மழை தூற்றுதல் போல் தூற்றுவர். அதன் பின்னர் வெண்ணெல் குன்றமும் செந்நெல் குன்றமும் நிற்கும் காட்சி சிவந்த பொன்மலையும் நவமணி குன்றுகளும் போல் தோன்றும். இவ்வாறு மள்ளர்கள் வானம் முட்ட நெற்குன்றுகளால் நிரப்பினர். இது நீர் சூழ்ந்த வயல் நிறைந்த மருத நிலமானது மலை சூழ்ந்த குறிஞ்சி நிலமாய் காட்சி அளித்தது.

இவ்வாறு குவித்து வைத்திருந்த நெல்லில் இருந்து அரசருக்கு உரிய ஆறில் ஒரு பங்கை கொடுத்தபின் எஞ்சியது கொண்டு மக்கள் தங்கள் அறவாழ்வை பேணினர். பரவரும் கடவுள் போற்றிய குரவரும் விருந்தும் பண்பின் விரவியக் கிளையும் தாங்கி விருந்தில் மகிழ்வர். இத்தகைய மக்கள் வாழும் மாடங்களால் நிறைவுற்றவை சோழநாட்டு ஊர்கள்.

## முடிவுரை

கரடுமுரடான நிலத்தைச் சீர்த்திருத்திப் பண்படுத்துவது மிகவும் சிரமமானது.ஆனால் சோழநாடு பண்பட்ட நாடு.காவிரியின் வளமும், காவிரி நாட்டு வயற்காட்சிகளும் உழவர் செயல்களும் சிறுவர்களின் செயல்களும் நெற்பயிரின் தன்மையும் ஊர்வளம் ஆகியவற்றை பெரியபுராணத்தில் சேக்கிழார் உரைத்தவை மிகவும் நேர்த்தியானவை. பெரியபுராணத்தில் பேசப்படும் அடியவர்கள் வீடுபேற்றை விரும்பாது இறைவனுக்குத் தொண்டாற்றி மகிழ்வதையே விரும்புவதாகச் சேக்கிழார் பாடுகிறார். இயற்கையுடன் இணைந்து இறைவனை எவ்வாறு வழிபடுவது என்பதை திருநாட்டுச் சிறப்பு அழகுற வெளிப்படுத்தியுள்ளது. இயற்கையைப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும். இயற்கையோடு இணைந்த வாழ்க்கை முறையே இன்றைய சமுதாயத்திற்கு மிக அவசியமானது. இதையே சேக்கிழாரும் அருமையாக திருநாட்டுச்சிறப்பில் விவரித்துள்ளார்.